ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் |
| திகதி | 2019.12.06 |

## பணம் கடன் வழங்கல் நடவடிக்கைகளின் மீதான பொதுமக்களின் விழிப்புணர்வு

அச்சு, இலத்திரனியல் மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் உட்பட பல்வேறுபட்ட வழிமுறைகளினூடாக கடன் வழங்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவருகின்ற விளம்பரங்கள் மற்றும் தொடர்பூட்டல் வடிவங்கள் பற்றி இலங்கை மத்திய வங்கி அவதானித்திருக்கிறது. இது தொடர்பாக, குறிப்பிட்ட ஒழுங்கீனங்கள் தொடர்பில் முறைப்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. சில குற்றச்சாட்டுக்கள் கடன் வழங்குநர் தொடர்பான மோசடிகள் தொடர்பானவையாகக் காணப்படுகின்ற வேளையில், சில உயர் வட்டி வீதங்கள் தொடர்பான முறைப்பாடுகளாகவும், வாடிக்கையாளர்களுக்கான தொந்தரவு தொடர்பானவையாகவும் மற்றும் வாடிக்கையாளர் தகவல் தொடர்பான இரகசியத்தன்மைகளை தவறாகப் பயன்படுத்துகின்றமை தொடர்பாகவும் காணப்படுகின்றன. பணம் கடன் வழங்குமொருவர் என்பது, பிணையுடனோ அல்லது பிணையின்றியோ வட்டியின் பொருட்டு ஏதேனுமொரு வழியில் கடனை வழங்குமொருவராக அல்லது அவராகவே கடனினை வழங்குகின்ற விதத்தில் விளம்பரங்களை மேற்கொள்ளுகின்ற அல்லது அறிவித்தல்களை மேற்கொள்ளுகின்ற அல்லது தன்னைத்தானே அவ்வாறு நிலைநிறுத்திக் கொள்கின்ற ஒருவர் என விபரிக்க முடியும்.

தற்போது காணப்படுகின்ற சட்டக் கட்டமைப்பின்படி, பணம் கடன் வழங்குவோர் வைப்புக்களை ஏற்றுக்கொண்டாலொழிய, உரிமம் வழங்கல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றின் கீழ் உள்ளடக்கப்படமாட்டார்கள். ஆகவே, இலங்கை மத்திய வங்கி நிதி அமைச்சுடன் சேர்ந்து பணம் கடன் வழங்குநர்களுக்கு உரிமம் வழங்கல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் வாடிக்கையாளர்களைப் பாதுகாத்தல் என்பனவற்றின் பொருட்டு சட்டம் ஒன்றினை வரைவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இக்குறிப்பிட்ட சட்டமானது தற்பொழுது வரைபுச் செய்முறையின் கீழ் இருப்பதுடன் அண்மிய எதிர்காலத்தில் சட்டமாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ் அவதானிப்புக்களைக் கருத்திற்கொண்டு, போலியான பணம் கடன் வழங்கல் வியாபாரத்தில் தொழிற்படுத்தப்படுகின்ற மோசடிகளின் விளைவாக பாதிக்கப்படுமொருவராக நீங்கள் மாறுவதனைத் தவிர்த்துக்கொள்வதற்கு மிகநெருக்கமான அவதானத்துடனும் கவனிப்புடனும் நடந்துகொள்ளுமாறு பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்காக ஒப்பந்தமொன்றினைச் செய்வதற்கு முன்னர் பொதுமக்கள் முழுத் தகவல்களையும்

பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேலும், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும்பொழுது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் தங்கியிருக்குமாறும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

**நீங்கள் எவற்றினை விசாரித்தல் வேண்டும்**

1. பணம் கடன் வழங்குநரின் சட்ட ரீதியான அந்தஸ்து

   அ. பணம் கடன் வழங்குநரின் பெயர், பதிவுசெய்யப்பட்ட முகவரி, கிளைகளின் அமைவிடம் மற்றும் சட்டரீதியான வடிவம் (ஏகஉரிமையாளரா, பங்குடமையாளரா அல்லது கம்பனியொன்றா என்பது பற்றி)

   ஆ. தலைவர், முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது ஏனைய முதன்மை அலுவலர்களைத் தொடர்புகொள்வதற்கான விபரங்கள்

2. கடன் தொடர்பான அனைத்து விடயங்கள் பற்றியும் தெளிவாக இருத்தல்

   அ. கடனின் காலம், வட்டி வீதம், வட்டி வீதம் கணிக்கப்படும் அடிப்படை (வட்டி வீதம் ஒரே வீதத்தில் அல்லது குறைவடைந்து வருகின்ற மீதியின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றது என்பது பற்றி)

   ஆ. மீள்கொடுப்பனவுக் கால இடைவெளி (தேவைப்படுத்தப்படும் வருடாந்தம், மாதாந்தம், வாராந்தம் அல்லது நாளாந்த மீள்கொடுப்பனவுகள் பற்றி)

   இ. செலுத்தப்படவேண்டிய நிலுவையிலுள்ள தொகை, செலுத்தத்தவறுவதற்கான கட்டணம் போன்ற கொடுக்கல்வாங்கல்களின் விபரங்களை எவ்வாறு சரிபார்த்துக்கொள்வது போன்றவை

   ஈ. தாமதித்த கொடுப்பனவுகள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் மேலதிகக் கட்டணங்கள்/ தண்டங்கள்

**நீங்கள் தவிர்க்க வேண்டியவை**

1. நீங்கள் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள எண்ணியிருக்கும் தரப்பினரை சரியான முறையில் அடையாளம் கண்டுகொண்டாலொழிய தனிப்பட்ட தகவல்களை, குறிப்பாக வங்கிக் கணக்குத் தொடர்பான தகவல்களை வழங்க வேண்டாம்.
2. நீங்கள் வாசிப்பதற்கோ விளங்கிக்கொள்வதற்கோ கடினமான உள்ளடக்கங்களைக்கொண்ட எந்தவொரு ஆவணங்களிலும் கையொப்பமிட வேண்டாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் பணம் கடன் வழங்குபவரிடமிருந்து விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
3. வெற்றுக்காகிதங்களில் கையொப்பமிடவேண்டாம்.
4. நீங்கள் அத்தகைய ஆட்களை பூரணமாக நம்பக்கூடியதாக இருந்தாலொழிய படிவங்களை நிரப்புவதற்கு எவரையும் அனுமதிக்கவேண்டாம். அத்துடன் இந்நோக்கத்திற்காக தனிப்பட்ட தகவல்களையும் நீங்கள் வழங்கவேண்டாம்.
5. ஒப்பந்தங்களை அவசரமாகச் செய்யவேண்டாம். இவற்றினைப் படிப்பதற்கும் அது பற்றிச் சிந்திப்பதற்கும் போதுமான நேரத்தினை எடுத்துக்கொள்வதுடன் தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ளுங்கள்.